සියලුම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education, Southern Province

දෙවන වාර පරීක්ෂණය - 2025
இரண்டாம் தவணைப் பரீட்சை - 2025/ Second Term Test - 2025

| | | |
|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade: 09 | வரலாறு I -II | කාලය / நேரம் / Time: 02 மணி. |

නම / பெயர் / Name ........................................................................................ විභාග අංකය / சுட்டிலக்கம் / Index No. ......................................

பகுதி I

❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

❖ 1– 5 வரையான வினாக்களுக்கான விடைகளை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து இடைவெளி நிரப்புக.

1) இலங்கையின் முதலாவது பிரித்தானிய ஆளுநர் ........................................................................ ஆவார். (பிரட்ரிக்நோத் / தோமஸ் மொயிட்லண்ட்)

2) இந்நாட்டில் நடைமுறையிலிருந்த ஒல்லாந்த ஆட்சியின் கீழ் நிலங்களின் வருமானத்திற்குப் பொறுப்பானவர் ................................................ என அழைக்கப்பட்டார். (ஹூப்ட்மன் / ஒபர் ஹூப்ட்)

3) இலங்கை பிரித்தானிய முடிக்குரிய குடியேற்ற நாடாக மாற்றமடைந்தது ................................................ ஆண்டிலாகும். (கி.பி.1798 / கி.பி.1802)

4) கி.பி.1818 சுதந்திரப் போராட்டத்தின் விளைவாக ................................................................ உட்பட ஒரு குழுவினர் மொரீசியஸ் தீவுக்கு நாடு கடத்தப்பட்டனர். (கெப்பெட்டிபொல / எஹலபொல)

5) கி.பி.1822ம் ஆண்டு ஜோர்ஜ் பேர்ட் என் கம்பளை சிங்கபிட்டிய தோட்டத்தில் முதன்முறையாக ........................................................................... பயிரிட ஆரம்பித்து வைத்தார். (கோப்பி / தேயிலை)

❖ 6 – 10 வரையான கூற்றுக்கள் சரியெனில் (✓) அடையாளத்தையும், பிழையெனில் (×) அடையாளத்தையும் அடைப்புக்குறிக்குள் இடுக.

6) கி.பி.1815 மார்ச் 02ம் திகதி மலையக ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் சந்தர்ப்பத்தில் ஆங்கிலக் கொடியை கீழே இறக்கி சிங்கக்கொடியை ஏற்றி வைத்தவர் ஹிக்கடுவ சிறீ சுமங்கல தேரர் ஆவார். ( )

7) தென்னிந்தியத் தொழிலாளர்களை கொண்டு வரமுடியுமானதால் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்ய குறைந்த செலவில் தொழிலாளர்கள் கிடைக்கப் பெற்றனர். ( )

8) இலங்கையின் தென்னை ஆராய்ச்சி நிலையம் லுணுவிலவில் அமைந்துள்ளது. ( )

9) மீகெட்டுவத்த குணாநந்த தேரர் அவர்கள் பஞ்ச மகா விவாதங்களை தலைமை தாங்கி நடாத்தி வைத்தார். ( )

10) சிப்பாய் இராணுவத்தில் இணைக்கப்பட்டிருந்த வீரர்களில் அதிகமானவர்கள் ஆங்கில இனத்தை சேர்ந்தவர்களாவர். ( )

❖ 11 – 20 வரையான வினாக்களில் சரியான விடையின் கீழ் கோடிடுக.

11) கேர்னல் மியுரன் அவர்களின் தலைமையில் “மியுரன் குழுவை” அனுப்பி வைத்தமைக்கான காரணம் யாது ?
1. இரட்டை ஆட்சி தோல்வியடைந்தமைக்கான காரணத்தை கண்டறிவதற்காகும்.
2. கி.பி.1797ல் கரையோரப் பிரதேசத்தில் ஏற்பட்ட கலவரத்திற்கான காரணத்தை கண்டறிவதற்காகும்.
3. இலங்கையிலிருந்து பெறப்படும் வருமானத்தை விட செலவு அதிகமாவதற்கான காரணத்தை கண்டறியவாகும்.
4. கி.பி.1803ல் ஆங்கிலேயர் மலைநாட்டின் மலைநாட்டின் மீது மேற்கொண்ட ஆக்கிரமிப்பு தோல்வியடைந்தமைக்கான காரணங்களை அறிவதற்காகும்.

12) இலங்கையில் வாழ்ந்த வாலிபர்கள் மத்தியில் தேசப்பற்றை அதிகரிக்க டீ.பீ.ஜயதிலக்க அவர்களினால் அமைக்கப்பட்ட சங்கம் யாது ?
1. மது ஒழிப்பு இயக்கம்
2. இலங்கை தேசிய சங்கம்
3. கொழும்பு பௌத்த வாலிப சங்கம்
4. சிலாப சங்கம்

13) இஸ்லாமிய மத வளர்ச்சியில் முன்னனி வகித்த இரு தலைவர்கள்,
1. எம்.சீ.சித்திலெப்பை, டீ.பீ.ஜாயா
2. எம்.சீ.சித்திலெப்பை, ஒராபி பாஷா
3. பொன்னம்பலம் இராமநாதன், ஒராபி பாஷா
4. பொன்னம்பலம் அருணாச்சலம், டீ.பீ.ஜாயா

14) ● பரம விஞ்ஞானார்த்த சங்கத்தை ஆரம்பித்தல்
● ஞாயிறு தர்ம பாடசாலையை ஆரம்பித்தல்
● வெசாக் போயா தினத்தை அரச விடுமுறை தினமாக மாற்றியமைக்க முன் நின்று உழைத்தல்
மேலே குறிப்பிட்ட இந்நாட்டு நடவடிக்கைகளில் முன்னின்று உழைத்த வெளிநாட்டு நடவடிக்கைகளில் முன்னின்று உழைத்த வெளிநாட்டு இனத்தவர் யார் ?
1. அநகாரிக தர்மபால 2. ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் 3. டீ.பீ.ஜயதிலக்க 4. வலிசிங்க ஹரிஸ்சந்திர

15) ஆங்கிலேய ஆட்சியில் இந்நாட்டில் முதன் முதலாக பயிரிடப்பட்ட வர்த்தகப் பயிர் யாது ?
1. தேயிலை 2. கோப்பி 3. இறப்பர் 4. கொக்கோ

16) “இந்தியாவின் மேன்மையாளர்” என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்ட தலைவர் யார் ?
1. மகாத்மா காந்தி
2. ஜவகர்லால் நேரு
3. சுரேந்திரநாத் பெனர்ஜி
4. தாதாபாய் நவ்ரோஜி

17) பாகிஸ்தான் என்று தனிநாட்டை அமைக்க தலைமை தாங்கியவர்,
1. பாலகங்காதர் திலகர்
2. மௌலானா அப்துல் கலாம் அஸாத்
3. ஆகா கான்
4. மொஹமட் அலி ஜின்னா

18) உலகப் புகழ் பெற்ற தாஜ்மஹால் மசூதியை அமைத்தவர் யார் ?
1. சாஜஹான் மன்னன் 2. அக்பர் மன்னன் 3. பாபர் மன்னன் 4. ஜஹங்கீர் மன்னன்



සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

19) இந்தியாவின் சிப்பாய் கலவரம் ஏற்படுவதற்கான உடனடிக் காரணம் யாது ?

1. ஆங்கிலேயர் மிசனரிமார்களுக்கு மாத்திரம் உதவி செய்தல்.
2. இந்தியாவின் பகுதிகள் கைப்பற்றப்படும் போது கையாண்ட கொள்கைகள்
3. என்பீல்ட் எனும் துப்பாக்கிகளை பயன்படுத்த மறுத்தவர்களுக்கு தண்டனை வழங்கல்
4. வர்த்தக சங்கங்களின் பலவீனமான வர்த்தகக் கொள்கை

20) அஹிம்சை வாத போராட்டங்கள் மூலம் பிரித்தானியரிடமிருந்து இந்தியாவை சுதந்திரமடையச் செய்ய நடவடிக்கை எடுத்த தலைவர் யார் ?

1. ஜவஹர்லால் நேரு
2. சுரேந்திரநாத் பெனர்ஜி
3. மொஹமட் அலி ஜின்னா
4. மகாத்மா காந்தி

($2 \times 20 = 40$ புள்ளிகள்)

## பகுதி II

❖ முதலாம் வினா கட்டாயமானது.
❖ மேலும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.
❖ மொத்தம் ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க வேண்டும்.

01) (அ) தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தில் குறிக்கப்பட்டுள்ள இடங்களுக்கு பொருத்தமான ஆங்கில எழுத்துக்களை தெரிவு செய்து விடைத்தாளில் எழுதுக. (06 புள்ளிகள்)

I. யாழ்ப்பாணம்
II. தேவேந்திரமுனை
III. மட்டக்களப்பு
IV. கற்பிட்டி
V. கலாவாவி
VI. தெதுறு ஓயா




(ஆ) I. இப்படத்தில் காட்டப்படுவது யாது ?
II. இது எங்கு அமைந்துள்ளது ?
III. இவ்விடத்தில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் யாது ? (03 புள்ளிகள்)



(இ) I. உருவில் காட்டப்பட்டுள்ள பௌத்த மதகுரு யார் ?
II. இவரால் அமைக்கப்பட்ட பிரிவெனா யாது ?
III. இவரால் எழுதப்பட்ட ஒரு நூலை குறிப்பிடுக.
(03 புள்ளிகள்)



02) I. இலங்கையின் கரையோரப் பகுதியை கைப்பற்றி ஆட்சி செய்த ஐரோப்பிய நாடுகள் மூன்றை குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

II. ஒல்லாந்தர்களுக்கு கீழைத்தேய ஒல்லாந்த வர்த்தக சங்கத்தை ஆரம்பிக்க அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட பின் அந் நிறுவனத்திற்கு கிடைத்த அதிகாரங்கள் யாவை ? (04 புள்ளிகள்)

III. (A) கி.பி.1638 ஒப்பந்தத்தில் பிரதான விடயங்கள் இரண்டை குறிப்பிடுக.
(B) இரண்டாம் இராஜசிங்க மன்னன் ஒல்லாந்த தூதுவருக்கு வழங்கிய பரிசுப் பொருட்கள் மூன்றை குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

03) I. பின்வரும் சம்பவங்களுடன் தொடர்புடைய நபர்களை ஒழுங்குமுறைப்படி குறிப்பிடுக.
A. அரச உரிமை அடிப்படையில் போர்த்துக்கல் நாட்டின் அரசனாக நியமிக்கப்பட்ட ஸ்பானிய மன்னன் யார் ?
B. கி.பி.1766ல் ஒல்லாந்தர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட மலையக மன்னன் யார் ?
C. சிறீ வீர பராக்கிரம நரேந்திரசிங்க மன்னனின் இராணி இறந்த செய்தியை அறிந்து சோகத்தை தெரிவிக்க வருகை தந்த ஒல்லாந்த தூதுவர் யார் ?
(03 புள்ளிகள்)

II. ஒல்லாந்தர்கள் இலங்கையில் அறிமுகப்படுத்திய நீதிமன்ற வகைகள் இரண்டை குறிப்பிடுக.
(04 புள்ளிகள்)

III. ஒல்லாந்தர்கள் மேலதிக வருமானத்தைப் பெறுவதற்காக இலங்கையில் மேற்கொண்ட நடவடிக்கைகள் மூன்றை குறிப்பிட்டு சுருக்கமாக தெளிவுபடுத்துக. (05 புள்ளிகள்)

04) I. பிரித்தானியரின் கவனம் இலங்கை மீது திரும்பியதற்கான காரணங்கள் மூன்றைக் குறிப்பிடுக.
(03 புள்ளிகள்)

II. கி.பி.1797ல் கீழைத்தேய ஆங்கில வர்த்தகக் கம்பனியின் ஆட்சிக்கு எதிராக கரையோரப் பிரதேசங்களில் ஏற்பட்ட கலவரத்திற்கான காரணங்கள் இரண்டை குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

III. (A) கி.பி.1803ம் ஆண்டு ஆங்கிலேயர் மலையகத்தை ஆக்கிரமைத்தமைக்கான காரணங்கள் இரண்டை குறிப்பிடுக.

(B) ஆக்கிரமிப்பு தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் மூன்றை குறிப்பிடுக.
(05 புள்ளிகள்)


සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki

05) I. ஆங்கிலேயர் இலங்கையில் ஆரம்பித்து வைத்த பெருந்தோட்டப் பயிர்கள் மூன்றைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

II. பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை வளர்ச்சியடையக் காரணமான கோல்புறூக் பிரபுவின் சிபாரிசுகள் இரண்டை குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

III. இலங்கையின் நுகர்வுப் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்க பிரித்தானிய ஆளுநர்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை தெளிவுபடுத்துக. (05 புள்ளிகள்)

06) I. 19ம் நூற்றாண்டின் முதல் பகுதியில் இலங்கைக்கு வருகை தந்த மிசனரி இயக்கங்கள் மூன்றை குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

II. இலங்கையில் மிசனரி நடவடிக்கைகள் வெற்றியளித்தமைக்காக காரணங்கள் இரண்டை குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

III. A. பௌத்தமத மறுமலர்ச்சியின் போது ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் அவர்களின் சேவைகளட மூன்றையும்

B. இந்துமத மறுமலர்ச்சிக்காக ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் சேவைகள் இரண்டையும் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

07) I. தமது வர்த்தக மத்திய நிலையங்களை இந்தியாவில் பின்வரும் நகரங்களில் அமைத்த ஐரோப்பிய நாடுகளை குறிப்பிடுக.

A. கோவா

B. சென்னை

C. பாண்டிச்சேரி

(03 புள்ளிகள்)

II. ஆங்கில ஆளுநர்கள் இந்தியாவினுள் தமது யுத்த ஆதிக்கத்திற்கு மேலதிகமாக அதிகாரத்தை பரவலடையச் செய்ய பயன்படுத்திய கொள்கைகள் இரண்டைக் கூறுக. (04 புள்ளிகள்)

III. கி.பி.1857ம் ஆண்டில் சிப்பாய் கலகம் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் ஐந்தைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

# 9 ශ්‍රේණිය කෙටි සටහන් පොත් SHORT NOTES




Rs : 300




Rs : 300




Rs : 300




Rs : 300




Rs : 300




Rs : 300




Rs : 300




Rs : 300




Rs : 300




Rs : 300




Rs : 300




Rs : 300




Rs : 300




Rs : 350

## 9 ශ්‍රේණිය ඉංග්‍රීසි මාධ්‍ය කෙටි සටහන් පොත්
## ENGLISH MEDIAM SHORT NOTE BOOKS




Rs : 180




Rs : 180




Rs : 180




Rs : 180

මෙම කෙටි සටහන් පොත් සකස් කොට ඇත්තේ ජාතික අධ්‍යාපන ආයතනය මගින් සම්පාදනය කොට ඇති නව විෂය නිර්දේශය අනුව, විෂය ප්‍රවීණත්වයෙන් යුත් සම්පාදක මණ්ඩලයක් විසිනි, එහෙයින් මෙහි අන්තර්ගත සියලු සටහන් එම විෂය නිර්දේශයේ සෑම මාතෘකාවක්ම ආවරණයකොට තිබේ. මෙම ග්‍රන්ථ සම්පාදනය කිරීමේ දී පූර්ණ අවධානය යොමුකොට ඇත්තේ සිසුන්ට මෙන්ම ගුරුවරුන්ට ද අවශ්‍යයෙන්ම මතකයේ තබා ගත යුතු සියලු කරුණු අන්තර්ගත කරමින් වන හෙයින් වෙනත් අතිරේක ග්‍රන්ථ පරිහරණයකින් තොරව වුවද අදාල විෂය නිර්දේශයේ වැදගත් කරුණු සියල්ල ඉතා පහසුවෙන් හැදෑරීමේ මෙන්ම මතකයේ රඳවා ගැනීමේ හැකියාව ද ලැබෙනු ඇත.

LOL.LK
LOL STORE (PVT) LTD
CASH ON DELIVERY
VISA
mastercard
KOKO
037 20 60 110
071 77 74 440
Buy Now
CLICK HERE